**2026 மார்ச் மாதம் 11- ஆம் தேதி புதன்கிழமை**

**கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி**

**O.S. நெம்பர் : 170/2021**

O.S. No.: 170/2021 – தங்கத்தாய் PW1 11.03.2026

க/பெ.பழனிச்சாமி

**சாட்சி அழைக்கப்பட்டு 1, 2 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

1. எனக்கு எழுதப்படிக்க தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் எனக்கு எழுதப்படிக்க தெரியாது என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன். வா.சா.ஆ.2 பாகப்பிரிவினை பத்திரத்தில் உள்ள விபரங்களை கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் பாகப்பிரிவினை பத்திரம் எழுதவில்லை, செக்யூரிட்டியாக என்னிடம் எழுதி வாங்கினார்கள். செக்யூரிட்டியாக என்னிடம் எழுதிவாங்கினார்கள் என்று வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

2. செக்யூரிட்டியாக எழுதிக்கொடுத்ததை எப்போது தெரிந்து கொண்டேன் என்றால் 2019 ம் வருடம் ஆகும். 2013 ம் ஆண்டு முதல் 2019 ம் வருடம் வரை நான் எந்த நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் பிரதிவாதியிடம் சென்று கேட்டப்போது தனது வெளிநாட்டில் படிப்பதால் பங்கு பிரித்துக் கொடுப்பதாக என்னிடம் கூறியதால் நான் நடவடிக்கை எடுக்கவில்லை. 2013 ம் ஆண்டு நான் எழுதிக்கொடுத்துவிட்டு, தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, என்னை ஏமாற்றி எழுதிக்கொண்டார்கள்.

3. வா.சா.ஆ.2 ஆவணத்தில் ரூ.7,26,000/- தொகையை பங்குத் தொகையாக பெற்றுக்கொண்டு, நான் எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால்

சரியல்ல, நான் பணம் வாங்கவில்லை. பணத்தையும் பெற்றுக்கொண்டு, வா.சா.ஆ.2 ஆவணத்தை எழுதிக்கொடுத்துவிட்டு தற்போது பொய் சாட்சியம் அளிப்பது முரண்தடை கோட்பாடு என்றால் சரியல்ல. வழக்குரையில் கோரியுள்ள பரிகாரம் என்ன என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும், எனது பங்கை கேட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளேன். 1986 ம் ஆண்டு எனது தந்தை பாகப்பிரிவினை எழுதிக்கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது.

4. சுயஉணர்வு இல்லாத எனது தந்தையிடம் எழுதிவாங்கினார்கள் என்று நான் எப்போது தெரிந்து கொண்டேன் என்றால் 2019 ம் ஆண்டு தெரிந்து கொண்டேன். சுயஉணர்வு இல்லாமல் எழுதி வாங்கியதாக எனது வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். என்னை எந்த தேதியில் நிர்பந்தப்படுத்தினார்கள் என்றால் 2020 ம் தேதி நிர்பந்தப்படுத்தினார்கள். எனது சகோதரிகளையும் நிர்பந்தப்படுத்தினார்களா என்றால் என்னை நிர்பந்தப்படுத்தினார்கள். எனது சகோதரரிடம் நான் நல்ல மறுபயன் பெற்றுக்கொண்டு வா.சா.ஆ.2 ஆவணத்தை எழுதிக்கொடுத்தேன் என்றால் சரியல்ல.

5. நல்ல மறுபயன் பெற்றுக்கொண்டு எழுதிக்கொடுத்ததால் 1986 மற்றும் 2013 ம் வருடத்திய பத்திரங்களின்படி காலாவதி தோஷத்திற்கு உட்பட்டது என்றால் சரியல்ல. நான் பத்திரங்களை ரத்து செய்ய வேண்டும் என்று கோரியுள்ள பரிகாரத்தில் ஏ பரிகாரம் பி பரிகாரத்திற்கு முரணானது என்றால் சரியல்ல. நான் கூட்டு சுவாதீனத்தில் இல்லை என்றாலும், எனது சகோதரர் பெயரில் தனிப்பட்ட ஆவணம் உள்ளது என்றால் சரியல்ல. ஆவணங்களின் அடிப்படையில் சரியான நீதிமன்ற கட்டணம் செலுத்தவில்லை என்றால் சரியல்ல.

6. 1986ம் ஆண்டு முதல் 2021ம் தேதிவரை நான் அறிவிப்பு அனுப்பாமல் பாகம் கோரியுள்ளது சரியானது அல்ல என்றால் சரியல்ல. காவல்நிலையத்தில் நான் அளித்த புகாரில் என்ன முடிவு எட்டப்பட்டது என்றால் நீதிமன்றத்தை அணுகும்படி அறிவுறுத்தினார்கள். வழக்குரையில் உரிமையியல் நீதிமன்றத்தை அணுகும்படி சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது சகோதரரிடம் பணம் பறிக்க வேண்டும் என்று பொய்யான புகார் கொடுத்து, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, பின்னர் புகார் முடிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

7. நான் ஆவணங்களுக்கு முரணாகவும், உண்மை தன்மைக்கு முரணாகவும் வாக்குமூலம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, நடந்த உண்மையை கூறுகிறேன். நான் பாகப்பத்திரம் எழுதிக்கொடுத்துவிட்டு வீண்வாதம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல, எனது பாகத்தை தான் நான் கேட்கிறேன். எனக்கு வியாஜ்ஜியமூலம் கிடையாது என்றால் சரியல்ல. நான் கூட்டு சுவாதீனதாரர் இல்லை என்றாலும், எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 11.03.2026 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI

Digitally signed by G SREE DEVI
Date: 2026.03.11 16:50:12 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
11.03.2026.